விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 243 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 03 செவ்வாய்க்கிழமை (19.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல்
சுத்தமான பசு நெய்
ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3675)
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567

## இ.போ.ச சாரதி, நடத்துநர் மீது பொன்னாலையில் தாக்குதல்

### ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் அரச பேருந்து ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் நோக்கி சென்று 15ஆம் பக்கம் பார்க்க

## ரெலிக்கொம் 'பரிசு' எனக்கூறி பண மோசடி செய்யும் விசமிகள்

### பொதுமக்களே எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்திலிருந்து கதைப்பதாக அநாமதேய தொலைபேசியில் இருந்து அழைப்பை எடுத்து உங்களுக்கு பணப்பரிசு கிடைத்துள்ளது. உங்கள் வங்கிக் கணக்கிலக்கத்தை அனுப்புங்கள். முதலில் 10 ஆயிரம் ரூபாயை அனுப்புகின்றோம் எனக் கூறுகின்றனர்.

இதனை நம்பி சம்பந்தப்பட்டவர் தனது கணக்கு இலக்கத்தை வழங்குகிறார்.

ஏலவே அவர்கள் கூறியதுபோல குறித்த கணக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## 2026ஆம் ஆண்டு முதல் 6 மாதங்களுக்குள்

# மாகாண சபைத் தேர்தல்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கிளிநொச்சி)

**2026**ஆம் ஆண்டு முதல் 6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

போதை மாத்திரைகளுடன்

## யாழ்.நகரில் இளைஞன் கைது



15ஆம் பக்கம் பார்க்க

மயிலிட்டியில்

## மீன் பிடிக்க சென்றவர் மயங்கி வீழ்ந்து மரணம்

(கரணவாய்)

மயிலிட்டியில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து 15ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் தாயகத்தில் கண்டுபிடிக்கப்படுகின்ற மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதிகோரி

### கையெழுத்துப் போராட்டத்துக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் கண்டுபிடிக்கப்படுகின்ற மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணை கோரி கையெழுத்துப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சமத்துவக் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

யுத்தகாலத்தில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புநடவடிக்கைக்கு நீதி 15ஆம் பக்கம் பார்க்க

ஏமாற்று வேலைகளைச் செய்யாது

## பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை கொடுங்கள்

### அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

ஏமாற்று வேலைகளைச் செய்யாது வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுங்கள் 15ஆம் பக்கம் பார்க்க

## மூன்று நாள் காய்ச்சல் அளவெட்டியில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டியில் மூன்று நாள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் அளவெட்டி மத்தியைச் சேர்ந்த தில்லை முருகேசு (வயது-72) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபருக்கு மூன்று நாட்களாக காய்ச்சல் ஏற்பட்டதால் அளவெட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை 17ஆம் திகதி பிற்பகல் நெஞ்சுவலி காரணமாக் 15ஆம் பக்கம் பார்க்க

தாளையடிக் கடலில்

## குளித்தபோது பல்டி அடித்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

தாளையடிக்கடலில்குளித்த போது பல்டி அடித்த இளைஞன் ஒருவர் தலையில் காயமடைந்த நிலையில் 16ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் பிரிவினைவாதிகளை திருப்திப்படுத்த அரசு முயற்சி

### விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



(கொழும்பு)

புலம்பெயர் தமிழ்ப் பிரிவினைவாதிகளை திருப்திப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார். 16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS 2025/II
# JAFFNA MUNICIPAL COUNCIL

1. The Chairman, **Regional Procurement Committee, on behalf of the Municipal Mayor, Jaffna Municipal Council, Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. **All the projects will be funded via Provincial Special Development Grant (Tourism Bureau, Northern Province) from The Government of the Democratic Socialist Republic of Srilanka.**
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure from the registered contractors.
3. To be eligible for contract award, the successful bidder should not have been black listed and should have been registered in the relevant field at the Construction Industry Development Authority (CIDA), in the field of Building for grade mentioned in the table below valid until the date of closing of the bids. Further, the registration should be valid at the date of award.
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987."** ***The original certificate of registration ( PCA 03) shall be submitted prior to contract award. The Procurement shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate."***
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the **Bidding Data and Contract Data** (Section 5) for SBD 1 Documents (Works specified in **GROUP B** in Table below)
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days **From 2025-08-19 to 2025-09-01** during **09:00 hrs and 14:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Municipal Commissioner, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna (T.P:021-2217691/021 222 2019, Fax:021 222 2334) from 9:00 hrs to 14:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna** as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.
10. Bids shall be accompanied by a copy of valid CIDA Registration.
11. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids and it will be the final regarding the bids.

| | | |
|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | **From 2025-08-19 To 2025-09-01** |
| | **Pre-Bid Conference** | **At 11.00 AM on 2025-08-26** |
| | **Closing and Opening of Bids** | **At 10.30 AM on 2025-09-02** |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group B | | | | | | | | |
| JMC/PMD/PSDG (Tourism)/2025/01 | Construction of toilet at Pannai Beach Park | 10.767 | 70 Days | C7 or Above (Building) | 4,000.00 +Vat 18% | 162,000.00 | 16.12.2025 | 77 Days |
| JMC/PMD/PSDG (Tourism)/2025/02 | Urban Street Development Mahathma Ganthi Road | 11.656 | 70 Days | C7 or Above (Highway Construction) | 4,000.00 +Vat 18% | 175,000.00 | 16.12.2025 | 77 Days |

Chairman
Regional Procurement Committee,
Jaffna Municipal Council,
Point Pedro Road, Nallur, Jaffna.

(C-3673)

# தங்கரதத்தில் அலங்காரக்கந்தன்




படங்கள் - சிவசாந்தன்

# ஊர்காவற்துறைப் பிரதேசசபையின் தேவைப்பாடுகள் தொடர்பில்

## ஆளுநருடன் கலந்துரையாடல்



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களை, ஊர்காவற்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.அன்னராசா தலைமையிலான குழுவினர் நேற்று திங்கட்கிழமை (18.08.2025) ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பிரதேச சபையின் தேவைப்பாடுகள் தொடர்பில் தவிசாளரால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன் அது தொடர்பான மனுவும் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. (ம-7)


# பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டு.கிழக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மகாலிங்கம் நடனகீர்த்தனன் ஆகிய நான் 19.08.2025 இன்று முதல் எனது பெயரினை கீர்த்தனன் எனப் பெயர் மாற்றம் செய்கிறேன்.

எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

19.08.2025

உண்மையுள்ள
மகாலிங்கம் கீர்த்தனன்


(5091)



# 2 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

## அமரர் சந்திரமோகன் தேனுஜன்

அன்னை மடியில் 17.06.2002
இறைவன் அடியில் 19.08.2023



உந்தன் அன்பு முகம் காணாமல்
கண்கள் கலங்குகின்றன
கதைகள் பல பேசி மகிழ்ந்திட
உடன்பிறப்பு துடிக்கின்றது
கள்ளமில்லாச் சிந்தையின்
கனிமொழி கேட்க
செவிகள் ஏங்கித் தவிக்கின்றன
ஆண்டுகள் இரண்டு
காற்றாய் பறந்தனவே
உன் பிரிவுத் துயர் தாளாது
நித்தமும் அணு அணுவாய்
மடிகின்றோம் நாமும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


இல.2/2, விவேகானந்தநகர்
கிழக்கு, கிளிநொச்சி

குடும்பத்தினர்

(1457)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு கம்பவாரிதி எழுதும் ஒரு பகிரங்க மடல்



(நேற்றைய தொடர்ச்சி)

கழகத்தின் மரபிற்கு இது ஒன்றும் புதிய விடயமல்ல. 'கம்பனடிப்பொடி' அவர்கள் தனது காரைக்குடி கம்பன் விழாவுக்கு, அப்போது தமிழகத்தின் முதல்வராய் இருந்த 'கலைஞரை' அழைத்துக் கௌரவித்திருந்தார்.

அதுபோலவே பெரியவர் மு.மு. இஸ்மையில் அவர்களும், சென்னைக் கம்பன் விழாவுக்குக் 'கலைஞரை' அழைப்பித்துக் கௌரவம் செய்திருந்தார். அந்த வரிசையில்த்தான் சென்னைக் கம்பன் கழகமும் தனது பொன்விழா நிறைவையொட்டி, இவ்வாண்டு 'முதல்வர், ஸ்டாலினை அழைத்துக் கௌரவித்தது. அது மரபுவழி வந்த ஒரு செயலேயாம்.

விழாவுக்கு வந்த முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், நீண்ட நேரத்தைக் கம்பனுக்காக ஒதுக்கிய தோடல்லாமல்,

தனது அமைச்சர்களையும் விழாவில் கலந்து கொள்ளச் செய்திருந்தார். அதோடு அவர் அந்த சபையின் தரமறிந்து, எவரது மனதும் நோகாமல் உரையாற்றி, நாகரீகமாய் நடந்து கொண்டார். அதனைக்கூட நீங்கள் ஒரு பாடமாய்க் கொள்ளவில்லை.

நீங்கள் உங்களது பேச்சால் முதல்வரின் வருகையைக்கூட விமர்சனத்திற்கு ஆளாக்கிவிட்டீர்கள். தேர்தல் வரப்போகும் இந்நேரத்தில் இத்தகைய விமர்சனங்கள், முதல்வருக்கு எத்தனை தலைவலியைத் தரலாம் என்பது பற்றிக் கூட, நீங்கள் சிந்திக்கத் தவறிவிட்டீர்கள்.

உங்களால், முன்பு எழுந்த ஆண்டாள் பற்றிய சர்ச்சையை அறிந்திருந்தும், ஆழ்வார்களைத் தெய்வமாகப் போற்றும் ஜெகத்ரட்சகன் அவர்கள், கவிதைமேலும், தமிழ்மேலும், உங்கள்மேலும் கொண்ட காதலால்த்தான், ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் சார்பாக, ஆண்டுதோறும் வழங்கி வந்த, 'கம்பன் விருதினை' இவ்வாண்டு உங்களுக்கு வழங்க முன் வந்தார்.

இந்த முடிவினை அவர்கள் எடுத்தபோது எத்தனை பேர் அதனை எதிர்த்திருப்பார்கள்? எத்தனை பேர் அதனை மறுத்திருப்பார்கள்? அவர்கள் எல்லோரையும் கடந்துதான், உங்களுக்கு அவ்விருதினை வழங்கக் கழகம் முன்வந்திருக்கும்.

இவ்விருதின் மூலம் ஆற்றலாளரான உங்களை, அருட்பணிக்குள் நுழைத்துவிடலாம் என்றுதான் அவர்கள் நினைத்திருப்பார்கள்.

நீங்களோ, அவர்களது உயர்ந்த எண்ணத்தைப் புரிந்து கொள்ளாமல் பேசி, இன்று அவர்களையே குற்றவாளிகளாய் சமூகத்தின் முன் நிறுத்திவிட்டீர்கள்.

இத்தனைக்கும் நீங்கள் சாதாரண ஒருவர் அல்லர்.

கவிப்பேரரசு! இந்தப் பட்டம் சாதாரணமான ஒன்றா என்ன?

கவிதைகளுக்கான பல உயர் பரிசில்களைப் பலதரமாய் பெற்றவர் தாங்கள், அத்தகைய உங்களிடம் ஒன்றைக் கேட்கத் தோன்றுகிறது.

நீங்கள் எழுதிய ஒரு கவிதையை உங்கள் எண்ணத்திற்கு மாறாக, எவரேனும் பிழையாக வியாக்கியானம் செய்தால், உங்கள் மனம் எவ்வளவு புண்படும். உணர்ந்து பாருங்கள்.

கவி மரபு தெரியாத ஒருவர் பேசியிருந்தால் அதனை மன்னிக்கலாம். கவிப்பேரரசான நீங்கள் இப்படிப் பேசியதால் தான் எல்லோரும் கொதித்துக் கோபிக்கிறார்கள்.

தேரை இழுத்துத் தெருவில் விடுவதே உங்களின் வேலையாகி விட்டது. ஏன் இந்த எதிர்மறைப் போக்கு? கம்பன், உங்களைப் போல, சினிமாவுக்காகக் கவிதை எழுதிய புலவன் அல்லன். அவன் அறம் நிலைக்கப் பாடிய பெரும் புலவன்.

அதனால்த்தான் கம்பகாவியத்தை நம் மக்கள் அறத்தின் ஊற்றாகவும், அன்பின் ஊற்றாகவும், பண்பாட்டின் ஊற்றாகவும், பக்தியின் ஊற்றாகவும், சத்தியத்தின் ஊற்றாகவும், சால் பின் ஊற்றாகவும் கருதிப் போற்றி வருகிறார்கள்.

அந்த உயர் பொக்கிஷத்தில் நீங்கள் கைவைத்தால் அவர்கள் எப்படிச் சகித்திருப்பார்கள்?

பெரும்புலவனான கம்பன், இராமனைக் 'காசில் கொற்றத்து இராமன்' என்று, காவியத்தின் ஆரம்பத்திலேயே உரைத்து விடுகிறான்.

இராமன் வெறும் காவிய நாயகன் மட்டுமல்லன். அவன் அறத்தின் நாயகன். குறித்த ஒரு சமயத்தாரால் போற்றி வணங்கப்படும் கடவுள் நாயகனுமாம். இம் மண்ணில், அவனுக்கான ஆலயங்கள் எத்தனை?

அவனுக்கான பாசுரங்கள் எத்தனை? அவனுக்கான பக்தர்கள் எத்தனை? இவற்றையெல்லாம் நீங்கள் அறியமாட்டீர்களா என்ன?

அறிந்திருந்தும் அவனைச் 'சித்த சுவாதீனம் அற்றவன்' என்று, உங்களால் எப்படிச் சொல்ல முடிந்தது?

இந்துமதம் சகிப்புத் தன்மை நிறைந்ததுதான். மனைவியைக் கடத்திச் சென்றவனையே மன்னித்த இராமனின் வழிவந்த சமயம் அது. அத்தகைய இந்துமதத்தின் சகிப்புத் தன்மையை, அதனது பலவீனமாய் இன்று பலரும் நினைத்து விடுகிறார்கள். அறிவாளியான நீங்களும் அங்ஙனம் நினைத்ததுதான் கவலை தருகிறது.

அன்பரே! ஒன்றே ஒன்றை உங்களிடம் கேட்க விரும்புகிறேன். இந்து மதத்தை இழிவுபடுத்தி இப்படியாய் விமர்சிப்பது போல, மாற்று மதம் ஒன்றை உங்களால் விமர்சிக்க முடியுமா?

மாற்று மதத்தவரால் வணங்கப்படும் இறைத்தன்மை கொண்ட ஒருவரை, 'சித்த சுவாதீனம் அற்றவர்' என்று உங்களால் சொல்லத்தான் முடியுமா?

சொல்வதை விடுங்கள்! நினைக்கத்தானும் உங்களால் முடியுமா?

நினைத்து முடிக்கும் முன் நீங்கள் தண்டனைக்கு ஆளாகிவிடுவீர்கள். அது உங்களுக்கே தெரியும்.

இந்து மக்கள் எப்போதும் சகித்திருப்பார்கள் என்று பலரும் நினைக்கிறார்கள்.

'குட்டக்குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்', எனும் உண்மையை இந்து மக்கள் இப்போது நன்றாக உணர்ந்துவிட்டார்கள்.

அதனால் இந்து மதத்தின்மேல் கைவைக்க விரும்புபவர்கள், இனி அதுபற்றி, சற்றுச் சிந்தித்து செயல்படுவதுதான் நல்லது. உங்களுக்கு எழுதும் இக் கடிதத்தின் மூலமே, உங்களைக் கடும்வார்த்தைகளால் விமர்சித்து வருவோர்க்கும், ஒன்றை நான் உரைத்து முடிக்க விரும்புகிறேன்.

அன்பர்களே! உங்கள் ஆத்திரத்தின் நியாயம் புரிகிறது.

ஆனாலும் நம் பண்பாட்டின் பெருமையை முதலில் நாம் நிறுவ வேண்டும்.



நம் மொழியினதும், மதத்தினதும் நாகரீகத்தை நாம் உணர வேண்டும். கவிஞரின் வார்த்தைகளால் கோபமுற்று, நீங்கள் பேசும் பேச்சுக்களில் சில காதுகளைக் கூச வைக்கின்றன.

ஆயிரம்தான் இருந்தாலும் அவர் இன்று இருக்கும் நம் தமிழ்க் கவிஞர்களில் ஒருவர். அவரைக் கேவலமாய்ப் பேசி வெளியிடும் செய்திகளால், நம் இனத்தின் நாகரீகம் மற்றவர்களின் ஐயத்திற்கு ஆளாகும். நம் இனத்தின் பெருமைக்காகப் போராட நினைக்கும் நீங்கள், மற்றவர்களின் செயலால் நிலை தழும்பக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒருவர் படியிறங்க, மற்றவரும் படியிறங்கினால், நம் பண்பாடு பாதாளத்தில் போய்த்தான் நிற்கும்.

உணர்வது உங்கள் கடன். இது எனது பணிவான வேண்டுகோள். நிறைவாக, கவிஞரிடமும் ஒரு வேண்டுகோளை முன் வைக்க விரும்புகிறேன் தவறு நிகழ்ந்து விட்டது. அது தவறியும் நிகழ்ந்திருக்கலாம்.

'சொற்சோர்வு' என்பது எல்லோருக்கும் ஏற்படக்கூடிய ஒன்றுதான்.

'நான் இராமனைத் தாழ்த்த நினைக்கவில்லை. காப்பாற்றவே நினைந்தேன். பேசிய வார்த்தைகள் தவறான அர்த்தத்தைத் தந்துவிட்டன. என் வார்த்தைகளால் மனம் நொந்து போனவர்களிடம், மனமார மன்னிப்புக் கோருகிறேன்' என்று ஓர் அறிக்கைவிட்டு, இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

சான்புக்குக் கட்டளை யாதெனின் தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்.

எனும் வள்ளுவரின் குறளையும், 'பணியுமாம் என்றும் பெருமை' எனும் அவரது கருத்தையும் ஏற்றுச் செயற்படுங்கள். உங்களது கவிதையும், பெருமையும் உயர்வடையப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி.

**'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'**

(முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள்

**வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இதுவரை முடிவடைந்த விளையாட்டுப் போட்டிகளின் அடிப்படையில் பாடசாலைகள் பெற்றுக்கொண்ட நிலைகள் பின்வருமாறு;**

## உயரம் பாய்தல்



வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவி எஸ். நந்தினி 1.42 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் மல்லாவி மத்திய கல்லூரி மாணவி கே.துஸ்யந்தினி, கிளிநொச்சி சென் திரேசாள் மகளிர் கல்லூரி மாணவி ஏ.காவியா மற்றும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மாணவி கே.வைஸ்ணவி ஆகியோர் 1.37 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

## 800 மீற்றர் ஓட்டம்



வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவன் ஏ.பிறீசன் தங்கப் பதக்கத்தையும் முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலய மாணவன் ஆர். லதுர்சன் வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஆர்.தனுசிகன் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)

## மாகாணமட்ட குத்துச்சண்டைப் போட்டியில் முத்தையன்கட்டு வலதுகரை ம.வி சாதனை



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச்சண்டை போட்டியில் பல பதக்கங்களை பெற்று துணுக்காய் கல்வி வலய முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.



மாகாணக் கல்வி திணைக்களத்தினால் 2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்கு இடையில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட குத்துச்சண்டை போட்டியில் பங்கு கொண்டு பல பதக்கங்கள் பெற்று முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

பாடசாலை விளையாட்டு வரலாற்றில் முதற் சாதனையாக தனுஷியா, பவித்திரன், தேனுஜா ஆகியோர் தங்கப் பதக்கத்தினையும், குணாளன், பவியரசி வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (3)

## சலஞ்சேஸ்-ரைற்ரன்ஸ் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது வேலணை சலஞ்சேஸ் அணி



தீவகத்தின் முதன்மைச் சுற்றுப் போட்டியான "சலஞ்சேஸ் - ரைற்ரன்ஸ்" வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் வேலணை சலஞ்சேஸ் அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்ததுடன் குறித்த சுற்றுப்போட்டியின் 2025 ஆம் ஆண்டுக்கான வெற்றியாளர்களாகவும் தெரிவாகினர்.

தீவகத்தை உள்ளடக்கிய வகையில் வேலணை சலஞ்சேஸ் மற்றும் ரைற்ரன்ஸ் கழகங்கள் இணைந்து வருடா வருடம் 10 பந்துப் பரிமாற்றங்களை கொண்டதாக நடத்திவரும் குறித்த மென்பந்துச் சுற்றுப் போட்டியில் இவ்வாண்டுக்கான போட்டி கடந்த 15 ஆம் திகதிமுதல் 17 ஆம் திகதிவரையான மூன்று நாட்கள் 24 அணிகளின் பங்கேற்புடன் வேலணை உப்புக்குழி மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றுவந்த சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் வேலணை சலஞ்சேஸ் அணியுடன் அல்லைப்பிட்டி சென்பிலிப்ஸ் அணி மோதிய நிலையில், சென்பிலிப்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 9 பந்துப் பரிமாற்றங்களுக்கு முகம் கொடுத்து அனைத்து இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சலஞ்சேஸ் அணி 9 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு 6 இலக்குகளை இழந்து 4 இலக்குகளால் வெற்றி பெற்றது. (3-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளின் பாணியில் அகற்றப்படும் இராணுவ முகாம்கள்



## எச்சரிக்கும் கம்மன்பில

★★★

**(கொழும்பு)........................ தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் பிரபாகரனின் "மக்கள் பாதை" என்ற தொனிப்பொருளில் இராணுவ முகாம்கள் அகற்றப்படும் செயற்பாடு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது போல் தோன்றுவதாக பிவித்துறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

★★★

பிவித்துறு ஹெல உறுமய கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, அன்று அதற்கு பின்னால் நின்றவர் பிரபாகரன் இன்று யார் இருக்கிறார் என்று தெரியாது என்றும் கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "மக்கள் வாழும் பகுதியில் இராணுவ முகாம்களை அமைப்பது சட்டவிரோதமானது என்கிறார் சுமந்திரன். அதனாலே இராணுவ அடக்குமுறைகள் நிகழ்கின்றன என்கிறார்.

அவ்வாறு என்றால் இலங்கையில் அதிக மக்கள் வாழும் ஹோமாகம பகுதியிலே பாரிய இராணுவ முகாம் இருக்கிறது.

அங்குள்ள மக்கள் இராணுவ முகாமுக்கு உள் நுழைய அஞ்சுவர், ஏனென்றால் முகாமுக்குள் நுழைந்தால் சுட்டு விடுவார்கள் என்ற பயம். அவ்வாறு சிந்திக்கவே மாட்டார்கள்.

அப்படியானால் குறித்த இளைஞர்களை யாரவாது தூண்டிவிட்டுள்ளனர். இது திட்டமிடப்பட்ட செயற்பாடாகவே தோன்றுகிறது. இராணு முகாமுக்குள் இரும்புகள் களவாட செல்வது இலேசான காரியமல்ல. அவர்கள் யாராவது ஒருவரின் தூண்டுதலுக்கு பலிக்கடாவாகியிருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் பிரபாகரன் யுத்தம் செய்து கூட ஒரு முகாமையாவது அகற்ற முடியாத நிலையில், பிரிவினை வாத ஆதிக்கத்தின் ஒரு செயற்பாடாகவே நான் இதனை பார்க்கிறேன்.

ஹர்த்தாலுக்கு பின்னால் இருக்கும் சக்தியை அரசாங்கம் கண்டுபிடித்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்."என அவர் தெரிவித்தார். (நி)

# நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு தெய்வீக சுகானுபவம் -II நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவலகள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு, யாழ். இந்தியத் துணைத்தூதரகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தெய்வீக சுகானுபவம் 11 நிகழ்வு நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை கந்தர்மடம் நல்லூர்க் கல்விக் கோட்ட மைதானத்தில் (பழைய யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில்) மாலை 6 மணி முதல் உள்ளூர்க் கலைஞர்களின் கலை நிகழ்வுடன் இந்தியக் கலைஞர்களான திருமதி. கிரண்மயி மடப்பு மற்றும் அவரது குழுவினரின் பரதநாட்டியம் மற்றும் திருமதி. நித்யஸ்ரீ மகாதேவன் மற்றும் அவரது குழுவினரின் கர்நாடக இசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலைஞர்கள், நடன ஆசிரியர்கள், பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பிரதிப்பணிப்பாளர் பா.நிருபராஷ் அறிவித்துள்ளார். (8)

# அத்துரலிய, துசிதவுக்கு பிடியாணை பிறப்பிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக நுகேகொட நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

அதேநேரம், தேசிய லொத்தர் சபையின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளர் துசித ஹல்லொலுவவுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரிகள் முன்வைத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, குறித்த நீதிமன்றங்கள் அவர்கள் இருவருக்கும் எதிராக பிடியாணை பிறப்பித்துள்ளன. (நி)

# இரு வாகனங்கள் மோதி விபத்து - ஒருவர் காயம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் உடையார் கட்டுப்பகுதியில் இடம் பெற்ற விபத்தில் இரண்டு கார்கள் சேதமடைந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பயணித்த கார் ஒன்று உடையார்கட்டு பகுதியில் வீதியில் திருப்ப முற்பட்ட போது மற்றொரு காருடன் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் காரில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் மூங்கிலாறு ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (8-299)

# ஆதன வரியை 8 சதவீதமாக குறைத்துள்ளோம் வவுனியா மாநகர முதல்வர்

(வவுனியா)

மாநகரில் பல்வேறு தேவைகள் இருந்தும் ஆதன வரியை 8 வீதமாக குறைத்துள்ளதாக வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபையின் ஆதனவரி 15 வீதத்தில் இருந்த நிலையில் நாம் சபையை பொறுப்பெடுத்த பின்னர் அதனை 8 வீதமாக குறைத்துள்ளோம். இது தொடர்பாக எனது மாநகர மக்களுக்கு சில தெளிவு படுத்தல்களை வழங்க வேண்டிய தேவை உள்ளது.

இந்த ஆதன வரியை 8 வீதத்தை விட இன்னும் குறைக்க முடியும். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்குமான சம்பளத்தின் 40 வீதமான பெறுமதியை அந்தந்த சபைகளே வழங்க வேண்டும். எதிர்வரும் வருடங்களில் அதன் 100 சதவீதத்தையும் சபைகளே வழங்க வேண்டிய நிலை உள்ளது.

இதனால் பாரியளவிலான நிதி அதற்கு ஒதுக்க வேண்டும். அத்துடன் வவுனியா மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டாலும் கிராமப்புறங்களில் உள்ள பல வீதிகள் குன்றும் குழியுமாகவே உள்ளது.

ஒரு கிலோ மீற்றர் தார் வீதி அமைப்பதற்கு அண்ணளவாக 10 மில்லியன் ரூபாய் தேவை. காப்பற் வீதிக்கு 20 மில்லியனும், அதே அளவிலான வடிகால் அமைப்பதற்கு 40 மில்லியனையும் செலவழிக்க வேண்டும். இப்படி பல தேவைகள் மாநகரில் உள்ளது. சபையின் சொத்துக்களை பராமரிக்க வேண்டியுள்ளது.

தற்போது எமது சம்பளத்தை விடுத்து ஒரு வட்டாரத்திற்கு அண்ணளவாக 5 மில்லியனை மாத்திரமே ஒதுக்கக்கூடிய நிதி வளமே தற்போது உள்ளது. மாநகரின் பொதுத்தேவைகளுக்காக பாரிய அளவிலான நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. நிலைமை இப்படி இருந்தும் 15 வீதமாக இருந்த ஆதன வரியினை நாங்கள் 8 வீதமாக குறைத்துள்ளோம்.

வரி மதிப்பீட்டு பணிகள் வருடா வருடம் ஒழுங்கு முறையாக செய்யப்படாமையினாலே மக்கள் மீது இந்த வரிச்சுமை சடுதியாக அதிகரித்துள்ளது என்றார். (8-250)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
0460
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308




கடந்த 13.08.1984 அன்று படுகொலை செய்யப்பட்ட கைதடி ப.நோ.கூ. சங்கபணியாளர்களையும் அதேநேரம் யுத்த காலத்தில் கொல்லப்பட்ட கைதடி மக்களையும் நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை காலை கைதடியில் நடைபெற்றது. மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவுகள், பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (படம்- சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 20 ஆம் திருவிழாவான கைலாச வாகனத் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வெகுசிறப்பாக இடம் பெற்றது.

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு- இசை அர்ச்சனை அக்கடமி மாணவர்கள், வயலின்- செல்வி. நந்தினி சுவாமி நாதசர்மா, மிருதங்கம்- சு. அரவிந்தசுப்ரமணிய சர்மா, கெஞ்சிரா- அ.அனந்த நாராயண சர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம் பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- முனைவர். சின்னையா சூரியகுமார், வயலின்-ப.சியாம்கிருஸ்ணா, மிருதங்கம்- வ.றமணசர்மா, கெஞ்சிரா- செல்வன் றமண சர்மா லயசர்மா, மோசிங்- செல்வன்.றமணசர்மா கானா மிருத சர்மா, கடம்- செல்வன். உதயகுமார் ஹிதுசன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

# கர்நாடக இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் பிரபல கர்நாடக இசைக் கலைஞர் கலாநிதி நித்தியஸ்ரீ மகாதேவன் வழங்கும் கர்நாடக இசை நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெறவுள்ளது.

இசை நிகழ்வில் வயலின்- கிருஷ்ணசாமி மெட்ராஸ் ஆனந்தராமன், கடம்- ராஜாராமன் நீலமணி, மிருதங்கம்- ஸ்கந்த சுப்ரமணியன் சுந்தரராஜன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3-33)

# விநாயகர் சதுர்த்தி



(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அபிஷேகம்,மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபப் பூஜையுடன் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் விநாயகப்பெருமான் திருவீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறும் என ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (8)

# அடிக்கல் நாட்டும் விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயத்தில் இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை புதன் கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 10.15 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)

# நல்லூர் உற்சவகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் "அருளுரை" இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணி முதல் 8.30 மணிவரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "முருகா நினது அருளால்" எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)




## கா! நல்லைக் குமரேசனே!

இளையதலை முறையெலாம் இடம்வலந் தெரியாது
இடறிவீழ்ந்தாடல் நெறியோ?
பழையநம் பண்பாடு பைந்தமிழர் மேன்மைகள்
பகற்கனவென் றாதல்முறையோ
வளைத்திடும் மதுபோதைப் பொருள்யாவு மிங்குமே
வந்துநட மாடல்தகுமோ
விழைந்திந்தக் கொடுமையை விரட்டியே யாண்டருள்
வேல்நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## திருப்பாதம் பணிவோம்

நல்லையம்பதியில் கால் வைத்தாலே
முருகா என்னும் நாமம் சொல்ல
துடிக்கிறதே உந்தன் அலங்காரம்
காணும் வேளையில் பத்தியால்
துடிக்கும் கண்கள் சொரியும் நீர்
முத்துக்கள் நிலம் நனைக்கிறதே
உள்ளக்குமுறல்கள் நினைக்கவே உன்
திருப்புகழ் பாடிடவே தேனிசையாய்
இனிக்கிறதே நல்லை குமாரனே
திருப்பாதம் பணிவோம்.

நி.கருணானந்தன்
நாவற்குழி.

## கையேந்தி நிற்கின்றோம்

எம்மைக் காத்தருள் புரிபவன் நீயே தான்
மனமுருகி கண்ணீர் சிந்துவோருக்கு
கேட்டவரம் கொடுப்பவனும் நீயே தான்
நம் நாட்டின் நல்லிணக்கம் விரைவாக
தழைத்தோங்கி யாவரும் மகிழ்வாக வாழ
நீயே துணைபுரிய வேண்டுமென
தேரில் வீற்றிருக்கும் உம் முன்னால்
கையேந்தி நிற்கின்றோம்.

கலாபூஷணம் சி. காசிப்பிள்ளை
அல்லாரை- கொடிகாமம்.



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச கலாசாரப் பேரவை இணைந்து நடத்திய பண்பாட்டு விழா கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## கரைச்சி பிரதே சபை வளாக கடைத்தொகுதி (மேல்த்தளம்), ஆனையிறவு வணிக சுற்றுலா மைய வணிக கடைத்தொகுதி, ஸ்கந்தபுரம் சந்தை மற்றும் ஆனைவிழுந்தான்குளம் சந்தையில் அமைந்துள்ள கடைகளினை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரல் 2025

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2025.08.19 தொடக்கம் 2025.09.01 ஆம் திகதி வரை மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 மணிவரை (அலுவலக நேரம்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :-2025.09.02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 2025.09.02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கரைச்சி பிரதேசசபை, தலைமை அலுவலகம்

**கரைச்சி பிரதேச சபை வளாக கடைத்தொகுதியிலுள்ள கடைகளுக்கான கேள்வி அட்டவணை (மேல்த்தளம்)**

| இல | விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடைஇல 01 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,880,000.00 |
| 02 | கடைஇல 02 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,880,000.00 |
| 03 | கடைஇல 03 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,880,000.00 |
| 04 | கடைஇல 04 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,880,000.00 |

**ஸ்கந்தபுரம் கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 33 | 4,000.00 | 1,000.00 | 10,000.00 | 960,000.00 |
| 02 | கடை இல 34 | 4,000.00 | 1,000.00 | 10,000.00 | 960,000.00 |
| 03 | கடை இல 35 | 5,000.00 | 1,000.00 | 12,000.00 | 1,200,000.00 |

**ஆனைவிழுந்தான்குளம் சந்தை கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 02 | கடை இல 02 | 3,350.00 | 1,000.00 | 10,000.00 | 804,000.00 |

**ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 04 | 2,000.00 | 1,000.00 | 2,400.00 | 240,000.00 |
| 02 | கடை இல 05 | 2,500.00 | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |

**நிபந்தனைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் கரைச்சி பிரதேசசபையின் ஆளுகை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளுக்கான கேள்வி கோருபவர்கள் மாத்திரம் வடமாகாண எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

02. கரைச்சி பிரதேச சபையினால் ஏற்கனவே கேள்வி கோரப்பட்ட கேள்விகள் மூலம் நீண்டகால குத்தகைதாரராக தெரிவு செய்யப்பட்டவர்கள் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச்சந்தைகளில் நிரந்தர கடைகளினை வாடகைக்கு பெற்றவர்கள் எவரும் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதுடன் அவ்வாறு தவறுதலாக விண்ணப்பித்திருப்பின் அவருடைய கேள்விப்பத்திரமானது சபையினால் எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

03. கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான அரை நிரந்தர, தற்காலிக கடைகளினை வாடகைக்கு நடத்துபவர்கள் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியுமாயினும் அவர்கள் கேள்வி கோரலில் சித்திகர குத்தகைதாரராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் ஏற்கனவே வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளினை சபைக்கு மீள கையளிப்புச்செய்தல் கட்டாயமானதாகும்.

04. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் வதிவிடம் மற்றும் ஆள் அடையாளம் ஆகியவற்றை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் குடும்ப பங்கீட்டு அட்டை பிரதி என்பவற்றுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.

05. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர்/செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் **2025.09.02** ஆம் திகதி முற்பகல் **10.00** மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு **2025.09.02** ஆம் திகதி முற்பகல் **10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

06. எமது சபையினால் கறுப்பு பட்டியலில் இணைக்கப்பட்ட எவரும் கேள்விப்பத்திரங்கள் விண்ணப்பிக்க முடியாது. எனினும் அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

07. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

08. ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களில் ஒருவர் மட்டுமே தனது பெயரில் கேள்வி விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியும். ( குடும்பம் என கருதப்படுவது இங்கு கணவன், மனைவி மற்றும் திருமணமாகாத பிள்ளைகளை குறிக்கும்) மற்றும் குறித்த அந்நபர் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியுமாயினும் ஒரு கடைக்கு மாத்திரமே வாடகை ஒப்பந்தத்தினை மேற் கொள்ள முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கடைத் தெரிவானது கேள்விச்சபையினாலேயே தீர்மானிக்கப்படும்.

09. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படும்.

10. சித்திகரக் குத்தகைதாரர் அறிவித்தல் கிடைத்து ஏழு நாட்களுக்குள் கேள்வி சமர்ப்பித்த முழுத்தொகை (ஒரே தடவையில் கோரிப் பெறும் பணம் - KEY MONEY) ஐயும் மூன்று மாதகால முற்பண வாடகையினையும் செலுத்தி ஒப்பந்தம் ஒன்றை செய்தல் வேண்டும். இதில் ஒரே தடவையில் கோரிப் பெறும் பணம் (KEY MONEY) எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படமாட்டாது.

11. முற்குறிப்பிட்ட 09, 10 ஆவது நிபந்தனைகளின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து கேள்விகள் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப் படமாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் கறுப்புப் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

12. குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மாதாந்த கடை வாடகையாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்துவதற்கு உடன்படுவதுடன் மாத வாடகைப் பணத்தினை குறித்த மாதத்தின் இறுதி வேலைநாளுக்குள் செலுத்துவதற்கும் உடன்படவேண்டும். தவறின் மாத வாடகையின் 10% தண்டப்பணத்தினையும் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ச்சியாக இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

13. கடையை வாடகைக்கு எடுப்பவரினாலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது கணவன் / மனைவி / வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம்:- மகன்,மகள்).

14. சபையின் அனுமதியின்றி வியாபார நிலையத்தினுள் எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

15. தெரிவுசெய்யப்படாத கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

16. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

17. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள், அபாய கரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயக ரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.

18. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரியினை / உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வரிச் சான்றிதழினை / உரிமத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

19. குறித்த குத்தகை நிலையத்திற்கான ஏனைய இதர வசதிகளுக்கான கட்டணங்கள் ( நீர் / மின்சாரக்கட்டணம் மற்றும் இணைப்புக்கட்டணங்கள் உட்பட) அனைத்தும் குத்தகைதாரராலேயே செலுத்தப்பட வேண்டும்.

20. சித்திகர குத்தகைதாரர் கரைச்சி பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறை களுக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.

21. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.

22. சபையின் தவிசாளரின் இந்த நிபந்தனைகள் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாகச் தவிசாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

23. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(C-3671)

**தவிசாளர், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.** திகதி:- 19/08/2025

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

## இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் 29 பேர் படுகாயம்



(ஜகர்த்தா)

இந்தோனேஷியாவின் சுலவேசி தீவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 29 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த நிலநடுக்கம் இந்தோனேஷியாவின் போசோ மாவட்டத்துக்கு வடக்கே 15 கிலோமீற்றர் தொலைவில் 5.8 ரிக்டராக பதிவாகியுள்ளது.

சுமார் 15 தடவைகளுக்கும் மேலாக அதிர்வுகள் ஏற்பட்டதால் அங்குள்ள வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், 29 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில், மீட்புப் படையினர் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (நி)



## அமெரிக்காவில் 605 அடி கோபுரத்தில் பறந்த இந்தியக்கொடி



(வோஷிங்டன்)

605 அடி உயரம் கொண்ட ஸ்பேஸ் நீடில் என்ற கோபுரத்தில் இந்திய தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. வேறொரு நாட்டின் கொடி இந்தக் கோபுரத்தில் ஏற்றப்பட்டது இது முதல் முறையாகும்.

அமெரிக்காவின் சியாட்டில் நகரில் இந்திய வம்சாவளியினர் பலர் வசித்து வருகின்றனர். அந்நகரின் வளர்ச்சிக்கு அவர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இந்நிலையில், சியாட்டில் நகரை வடிவமைப்பதில் பெரும் பங்கு வகித்த இந்திய-அமெரிக்க வம்சாவளியினரை அங்கீகரிக்கும் வகையில் நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன்படி, சியாட்டில் நகரின் ஸ்பேஸ் நீடில் என்ற கோபுரத்தின் உச்சியில் இந்தியாவின் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. (நி)

# உக்ரைனை நே... இணைக்க மு...

## ட்ரம்ப் அறிவிப்பு

**(வோஷிங்டன்)** ▪▪▪▪▪▪▪▪▪▪▪ உக்ரைனை நேட்டோவில் சேர்க்க முடியாது என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணைய ஆர்வம் காட்டி வந்தது.

இதனை கடுமையாக எதிர்த்த ரஷ்ய ஜனாதிபதி புடின், நேட்டோவில் இணையும் முடிவை கைவிடாவிட்டால் உக்ரைன் மீது போர் தொடுப்போம் எனக்கூறி தாக்குதலை தொடங்கினார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே 2022 ஆம் ஆண்டு தொடங்கிய போர் தற்போது வரை நடைபெற்று வருகிறது.


இந்தப் போர் முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில், ரஷ்ய ஜனாதிபதி புடின் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஓகஸ்ட் 15 ஆம் திகதி அலாஸ்காவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஆனால், இந்த சந்திப்பில் எந்த ஒரு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை. அதே வேளையில், உக்ரைனின் டொனெட்ஸ்க் பிராந்தியத்தை கைப்பற்றும் நோக்கில் ரஷ்யா தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது.

புடின் சந்திப்பையடுத்து, வெள்ளை மாளிகையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை ட்ரம்ப் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, பிரித்...

## உலகில் முதன் முதலில் நடைபெற்ற மனித உருவ ரோபோ ஒலிம்பிக் போட்டி



(பீஜிங்)

உலகில் முதன்முறையாக நடத்தப்படும் மனித உருவ ரோபோ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி சீனாவின் பீஜிங்கில் இடம்பெற்றது.

15 ஆம் திகதி முதல் இடம்பெறும் இந்தப் போட்டிகள் நேற்று முன்தினம் வரை நடைபெற்றன.

சீனா, அமெரிக்கா, ஜேர்மனி, பிரேசில், ஜப்பான் உள்ளிட்ட 16 நாடுகளைச் சேர்ந்த 280 அணிகள் பங்கேற்ற இந்த நிகழ்வில், 500இற்கும் மேற்பட்ட ரோபோக்கள் பங்கேற்றுள்ளன.

உலகில் மனித உருவ ரோபோக்கள் மட்டுமே பங்கேற்று நடைபெற்ற முதல் ஒலிம்பிக் போட்டி இதுவாகும்.

இந்தப் போட்டியில், கால்பந்து, குத்துச்சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ் உள்ளிட்ட 26 விளையாட்டுக்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# நட்டோவில் ...முடியாது!




...தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்ள உள்ளனர்.

இந்த சந்திப்பிற்கு முன்னதாக ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில், ரஷ்யா உடனான போரை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி விரும்பினால் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரலாம். இல்லையென்றால் தொடர்ந்து சண்டையிடலாம்.

இந்தப் போர் எப்படி தொடங்கியது என்பதை நினைத்து பார்க்க வேண்டும்.

12 ஆண்டுகளுக்கு முன்னர் ஒபாமா வழங்கிய கிரிமியாவை திரும்பப் பெறமுடியாது. உக்ரைனை நேட்டோவில் சேர்க்க முடியாது. சில விடயங்கள் ஒரு போதும் மாறாது" என தெரிவித்துள்ளார். (நி)

## குழந்தை பெற்றெடுக்கும் ரோபோக்களை உருவாக்க சீனாவில் புதிய முயற்சி



(பீஜிங்)

சீன விஞ்ஞானிகள் மனித கருவை சுமந்து குழந்தை பெற்றெடுக்கும் ரோபோக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சீனா, "ரோபோட்டிக்" தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது. அங்கு சமீபத்தில் ரோபோக்கள் விற்பனைக்கு என்றே பிரத்யேக வணிக வளாகம் திறக்கப்பட்டது.

இந்நிலையில், சீனாவின் குவாங்சோவைச் சேர்ந்த "கைவா டெக்னாலஜி" நிறுவனம் கருவை சுமந்து குழந்தை பெற்றெடுக்கும் திறன் உடைய ரோபோவை உருவாக்கும் ஆய்வு பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த ஆய்வுக்கு சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஜாங் கிபெங் தலைமை தாங்குகிறார்.

இந்த தொழில்நுட்பம் வெற்றிபெற்றால், மலட்டுத் தன்மை உள்ள தம்பதியர் அல்லது உயிரியல் கர்ப்பத்தை விரும்பாதவர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து விஞ்ஞானி ஜாங் கிபெங் கூறுகையில், "இந்த தொழில்நுட்ப ஆய்வு தற்போது மேம்பட்ட நிலையில் உள்ளது.

ரோபோவின் வயிற்றில் செயற்கை கருப்பையை பொருத்தி, செயற்கை முறையில் கருத்தரித்தல் செய்யப்படும்.

கரு அதில் வளரும். இந்த ரோபோவின் மாதிரி அடுத்த ஆண்டு அறிமுகமாகும்," எனத் தெரிவித்தார்.

இந்தத் தொழில்நுட்பம், 2017இல் செயற்கை கருப்பை திரவத்துடன் கூடிய, "பயோபேக்" மூலம் ஆடுகள் கருவிலிருந்து வளர்க்கப்பட்ட ஆய்வை அடிப்படையாகக் கொண்டது.

இந்த தொழில்நுட்பம் வெற்றியடைந்தால், தாயுடன், கருவில் வளரும் குழந்தைக்கு எப்படி பிணைப்பு ஏற்படும், அதற்கு மனரீதியாக என்ன தாக்கம் ஏற்படும் போன்ற கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. (நி)

## ஒடிஷாவில் தங்கச் சுரங்கம் கண்டுபிடிப்பு!



(டில்லி)

ஒடிஷாவில், 20,000 கிலோ கிராம் வரை தங்கத்தினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சுரங்கங்கள் இருப்பதை இந்திய புவியியல் ஆய்வு மையம் கண்டறிந்துள்ளது.

ஒடிஷாவின் பல்வேறு மாவட்டங்களில் கனிமவள திட்டங்களுக்கான பணிகளில், இந்திய புவியியல் ஆய்வு மையம் ஈடுபட்டு வருகின்றது.

அப்போது தியோகர், சுந்தர்கர், நபாரங்பூர், கியோன்ஜார், அங்குல் உள்ளிட்ட மாவட்டங்களில் தங்கச் சுரங்கங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக மயூர்பன்ஞ், மல்கன்கிரி, சாம்பல்பூர் மற்றும் பவுத் ஆகிய இடங்களில் சுரங்கங்கள் தோண்டி, தங்கத்தை வெட்டி எடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இதை, அம்மாநில சட்ட சபையில் சுரங்கத்துறை அமைச்சர் விபூதி பூஷண் ஜெனா உறுதிப்படுத்தியுள்ளார்.

தங்கச் சுரங்கங்களில் எவ்வளவு தங்கம் இருக்கும் என்ற தகவல் இது வரை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை. எனினும், 20,000 கிலோ வரை தங்கம் இருக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், 7 முதல் 8 இலட்சம் கிலோ வரையிலான தங்கத்தை வெளிநாடுகளில் இருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ளது. அதை ஒப்பிட்டு பார்க்கும்போது, தற்போது கண்டறியப்பட்ட தங்கச் சுரங்கங்கள் மூலம் உள்நாட்டின் தேவையை பூர்த்தி செய்வது கடினம்.

எனினும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான கதவுகளை இந்த தங்கச் சுரங்கங்கள் திறந்து விட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஹேங்கர் ரக நீர்மூழ்கிக் கப்பல் பாகிஸ்தானுக்கு வழங்கிய சீனா



(பீஜிங்)

பாகிஸ்தானுக்கு மேலும் ஒரு ஹேங்கர் ரக நீர்மூழ்கிக் கப்பலை சீனா வழங்கியது.

பாகிஸ்தானுடன், அண்டை நாடான சீனா நெருக்கம் காட்டி வருகிறது. அந்நாட்டுக்குத் தேவையான ஆயுதங்களை வழங்குவதோடு, வீரர்களுக்கும் சீனா திறன் பயிற்சி அளிக்கிறது.

பாகிஸ்தான், இராணுவத்தினர் பயன்படுத்தும், 80 சதவீத ஆயுதங்கள் சீனாவிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டவை.

கடற்படையை வலுப்படுத்தும் வகையில், சீனாவிடம் இருந்து எட்டு ஹேங்கர் ரக நீர்மூழ்கிக் கப்பலை வாங்க பாகிஸ்தான், ஒப்பந்தம் போட்டது.

அதன்படி, நான்கு நீர்மூழ்கிக் கப்பல்கள் சீனாவிலும், மீதமுள்ள நான்கு கப்பல்கள் பாகிஸ்தானிலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஏற்கனவே இரண்டு ஹேங்கர் ரக நீர்மூழ்கிக் கப்பல்களை பாகிஸ்தானுக்கு சீனா வழங்கிவிட்டது.

இந்நிலையில், மூன்றாவது ஹேங்கர் ரக நீர்மூழ்கிக் கப்பலை, சமீபத்தில் பாகிஸ்தானுக்கு அந்நாடு வழங்கியது.

சீனாவின் வூஹான் நகரில் நடந்த விழாவில், அந்தக் கப்பல் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒட்டுசுட்டான் இளைஞன் உயிரிழப்பு

# விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞன் உயிரிழந்த விவகாரத்தில் ஒரு தலைப் பட்சமாக செயற்படுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் முயற்சிக்கவில்லை. பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இராணுவ முகாமிற்குள் சில தரப்பினர் அனுமதியின்றி பிரவேசிக்க முற்பட்டமையே இந்த சம்பவத்துக்கான அடிப்படை காரணியாகும். இவ்வாறு உட்பிரவேசித்தவர்களில் ஒருவர் பிடிபட்ட நிலையில் அவர் அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த நபர் தொடர்பில் இதற்கு முன்னரும் அதாவது ஜனவரி 18ஆம் திகதி இதே முகாமிற்குள் நுழைந்து பொருட்களை திருடியமை தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி சம்பவம் இடம்பெற்ற போதிலும், 8ஆம் திகதியே முத்துஐயன் கட்டு வாவியில் நபரொருவரின் சடலம் காணப்படுவதாக அறியக்கிடைத்தது. பின்னர் முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் பரிசோதனைகளையடுத்தே இந்த நபர் முதல் நாள் முகாமுக்குள் பிரவேசித்தவர்களில் ஒருவர் எனத் தெரியவந்தது.

அதற்கு முன்னர் இராணுவத்தில் எவரும் இது தொடர்பில் அறிந்திருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் இந்த தகவல் கிடைத்த பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்கமைய இந்த மரணத்துக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பில்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஒரு தலைப்பட்சமாக செயற்படுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் முயற்சிக்கவில்லை. பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினையும் வழங்குகின்றோம். அதேபோன்று எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கும் நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம் எனவும் அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L,சாரதி
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/15920

பிறப்பு:1988- இந்து
நட்சத்திரம்: மூலம்
கி-பா-75
1 இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில் -BSc,PHD, Lecturer
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: B/15921

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:மூலம்
12 இல் செவ்
கி-பா- 22
உயரம்:5'7"
தகைமை/தொழில் :Engineer (Singapore)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15922

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: பூராடம்
2 இல் செவ்
கி-பா-7 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில் - Bsc,Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15923

பிறப்பு: 1999- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
2 இல் செவ்
உயரம்:6'
தகைமை/தொழில்: BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்
தொ.இ: B/15924

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி-பா- 30 1/2
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BSc,ITwork
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15930

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-ரோகினி
கி-பா-36
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: சித்தமருத்துவர்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15931

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்- மகம்
8 இல் செவ்
கி-பா-17 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BE, Engineer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15933

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-விசாகம்
11 இல் சூரிசெவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HND Software Engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15941

பிறப்பு-1986-இந்து
நட்சத்திரம் - பூரட்டாதி
2 இல் செவ்
கி-பா-34 3/4
உயரம்-5'6"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/15942

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 428

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# புகைப்பழக்கம்

ஒருவர் சிகரெட்டும் கையுமாக வந்தார்.

"இந்த புகைப்பிடிக்கின்ற பழக்கத்தை நிறுத்திட வேண்டும் என்று தான் பார்க்கிறேன்! முடியவில்லை" என்றார்.

புகைப்பிடிப்பதை நிறுத்துவது மிகவும் சுலபம் சார்! என்றார் இன்னொருத்தர்.

"எப்படி சொல்கின்றீர்கள்?" என்று கேட்டார் அவர்.

"நான்கூட ஏற்கனவே பத்துத் தடவை அந்தப் பழக்கத்தை நிறுத்தியிருக்கிறேன் சார்!" என்றார் இவர்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

புகைப்பழக்கத்தை திடீர் என்று விட்டுவிடுவது கஷ்டம்தான்.

இருந்தாலும் இது சம்பந்தமான ஆராய்ச்சி - அனுபவம் -இது இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சில வழிமுறைகளைச் சொல்கிறார்கள்.

அதாவது புகைப்பிடிப்பதை நிறுத்த பத்து வழிகள் உண்டு என்று சொல்கிறார்கள்.

அது என்னென்ன என்பதை தெரிந்து கொண்டு உபயோகப்படுதா என்று பார்க்கலாமே!

முதலாவது கருத்து: கொஞ்ச நாளைக்கு புகைப்பிடிக்கும் நண்பர்களை விட்டு விலகி இருக்க வேண்டும். இதனாலே புகைப்பிடிக்கும் ஆசை குறையும்! அந்தப் பழக்கத்தை மறுபடியும் ஆரம்பிக்கக்கூடாது என்ற எண்ணம் உறுதிப்படும்.

இரண்டாவது கருத்து: புகைப்பிடிப்பதை எதிர்த்து தீவிரமாக பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து விடவேண்டும். அது அடுத்தவர்களுக்கும் பயன்படும். உங்களுக்கும் உபயோகப்படும். உங்கள் உள்ளுணர்வை அது தூண்டும். உங்களை உறுதிகொள்ள வைக்கும்!

மூன்றாவது கருத்து: தினமும் இரண்டு முறை குளிக்க வேண்டும் எப்படி தெரியுமா? முதலிலே வெது வெதுப்பான தண்ணீர். அதன்பின் குளிர்ந்த நீர் . இப்படி மாற்றி மாற்றிக் குளிக்க வேண்டும்.

நான்காவது கருத்து: உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும்.

மூச்சு வாங்குகின்ற மாதிரியான பயிற்சிகள் நல்லது. பிராணயாமம் மூச்சுப் பயிற்சி ரொம்ப நல்லது.

ஐந்தாவது கருத்து: சாப்பாடு மிதமாக இருக்க வேண்டும். சீராக இருக்க வேண்டும். பச்சைக் காய் கறிகள், பழங்கள் சாப்பாட்டிலே சேர்த்துக் கொள்ளலாம். அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டு இரத்தத்திலே சர்க்கரையின் அளவை பராமரிக்க வேண்டும். இது நரம்புகளை அமைதிப்படுத்தும்.

ஆறாவது கருத்து: ரொம்ப நேரம் பசியோடு இருக்கக்கூடாது. புகைப் பிடிப்பதை நிறுத்த முயற்சி செய்யும் போது எடைக் குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது.

ஏழாவது கருத்து: காபி, தேநீர், மதுபானம், போதைப் பொருட்கள் கலந்த உணவுகள் இதெல்லாம் வேண்டாம். புகைப்பிடிப்பதை அதெல்லாம் ஊக்கப்படுத்தும். கடுகு, மிளகு காரமான பொருட்கள் தவிர்க்க வேண்டும்.

உப்பு அளவை குறைக்க வேண்டும். தினமும் பத்து குவளை தண்ணீராவது குடிக்க வேண்டும். வெறும் நீர் புகை பிடிக்கும் ஆவலைத் தணிக்கும்!

எட்டாவது கருத்து: கையிலே சிகரெட், புகையிலை ஏதாவது இருந்தால் உடனே தூக்கி எறிந்து விடுங்கள். அது கையிலே இருக்கும் வரைக்கும் புகைப்பிடிக்கின்ற ஆசை வந்து கொண்டே இருக்கும்!

ஒன்பதாவது கருத்து: இறை நம்பிக்கை உள்ளவர்கள். புகைப்பிடிக்கின்ற எண்ணம் வரும்போது எல்லாம் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்து விடலாம்.

பத்தாவது கருத்து: உங்களுக்கு ரொம்பவும் வேண்டியவர்கள் யாரோ. அவர்களிடம் எல்லாம் நீங்கள் புகைப்பிடிப்பதை நிறுத்தி விட்டதாக சொல்லிவிடுங்கள்.

இந்தப் பத்து வழிகளையும் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டால் புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்தி விடலாம் என்று சொல்கிறார்கள் அனுபவப்பட்டவர்கள்!

முயற்சி செய்து பார்க்கலாம்.

ஒரு முக்கியமான இடத்திலே நின்று கொண்டு இருந்தார் ஒருவர். அங்கே வந்த இன்னொருத்தர் "ஏன் சார் இந்த இடத்திலே சிகரெட் பிடிக்கலாமா?" என்று அனுமதி கேட்டார்.

"இந்த இடத்திலே சிகரெட் பிடிக்கக்கூடாது" என்றார் இவர்.

"நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள் ஆனால் இந்த இடத்திலே கீழே நிறைய சிகரெட் துண்டுகள் கிடக்கிறதே அவை எல்லாம் யாரு?" என்றார் அவர்.

"அவர்கள் எல்லாம் உங்கள் மாதிரி என்னிடம் அனுமதி கேட்காதவர்கள்!" என்றார் இவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டில் இதுவரையில் 257 பேர் நீரில் மூழ்கி மரணம்

**(கொழும்பு)**

**இந்த ஆண்டில் இதுவரையில் 257 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இதில் 220 ஆண்களும் 37 பெண்களும் உள்ளடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

நீரில் மூழ்கிய நிலையில் உயிருக்கு போராடிய 69 உள்ளூர் பிரஜைகளும் 33 வெளிநாட்டுப் பிரஜைகளும் மீட்கப்பட்டுள்ளனர். (நி)

# 1.5 மில்லியனை தாண்டிய சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை இதுவரை 1.5 மில்லியனைத் தாண்டியுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தபால் தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பால் மக்கள் அவதி

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் பணி பகிஷ்கரிப்புக் காரணமாக நேற்று திங்கட்கிழமை தபால் அலுவலகங்கள் மூடப்பட்டு காணப்பட்டன.

இதனால் தபால் நிலையத்திற்கு சேவை பெறுவதற்காக வருகை தந்த பொதுமக்கள் சேவைகள் பெறாது ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை காணமுடிந்தது.

ஊழியர்கள் கடமையை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் வெளியேறும் நேரம் என்பவற்றை கைவிரல் அடையாள இயந்திரங்களில் பதிய வேண்டும் என்ற உத்தரவுக்கு எதிர்ப்பு, மேலதிக வேலை நேர கொடுப்பனவு மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவு வழங்கப்படுவதில் தாமதம் உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய தபால் பரிமாற்றத்தில் தொடங்கிய இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் நாடு தழுவிய அளவில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக நேற்று அனைத்து தபால் செயற்பாடுகளும் பாதிக்கப்படும் என்று ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார். (நி)

# கனியமணல் அகழ்வுக்கு எதிராக 16 ஆவது நாளாகவும் போராட்டம்




(மன்னார்)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனியமணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் 16 ஆவது நாளாக நேற்றும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

பெருந்திரளான பொது மக்கள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (8)

# முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதியக் குறைப்பு

## மறுபரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தைக் குறைக்கும் அரசாங்கத்தின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு, ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

தற்போது, சுமார் 490 ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் உயிரிழந்த உறுப்பினர்களின் மனைவிமார்களும் இந்த ஓய்வூதியத்தைப் பெறுகின்றனர்.

இவர்களில் பலர் மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்வதாகவும் அவர்களில் 4 முன்னணி கட்சித் தலைவர்களும் உள்ளதாகவும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்கள் பிரதிநிதிகளையும் திருடர்கள் அல்லது மோசடி செய்பவர்கள் எனக் கருத முடியாது.

சில முன்னாள் உறுப்பினர்கள் இந்த ஓய்வூதியத்தை உணவு மற்றும் மருந்து வாங்குவதற்குப் பயன்படுத்துவதாகவும் இறுதி முடிவு எடுப்பதற்கு முன் அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (நி)

# உலர் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

உலக சந்தைக்கு ஏற்ற வகையில் உலர் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பா, கனடா மற்றும் அவுஸ்திரேலியாவிற்கு உலர் மீன்களை ஏற்றுமதி செய்ய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு தெரிவித்தது.

ஏற்றுமதிக்கான உலர் மீன் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக நவீன தொழில்நுட்பம், உபகரணங்கள் மற்றும் நிதி வசதிகளை வழங்குவதில் கவனம் செலுத்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்தது. (நி)

# இராசிபலன்

19.08.2025
ஆவணி 03, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 4.47 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 2.57 மணிவரை
சுப நேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்: அனுசம்

**வளவன்**

**மேஷம்** — செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** — எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பொறுமையால் பெருமை கொள்ள வேண்டிய நாள், சயனசுகக் குறைவுண்டு.

**துலாம்** — தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

**மகரம்** — மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்** — பொது வாழ்வில் புகழ் கூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், குடும்பத்தில் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வழிபாடு குதூகலம் தரும், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், இனிமையான நாள்.

**மிதுனம்** — இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கன்னி** — அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கனவுப் பலிதமுண்டு.

**தனுசு** — குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** — எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**தவறுகள் ஏற்படாது நடப்பவர் புத்திசாலி.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 848





விழுந்து கிடந்த மரத்துக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு பல்லக்கு தரையில் வைக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் இரண்டு ஆட்கள் மட்டும் நின்றார்கள். மற்றவர்கள் விழுந்த மரத்தினடியில் அகப்பட்டுக் கொண்டவர்களைக் காப்பாற்றுவதில் முனைந்திருந்தார்கள் போலும்.

“அமுதா! பல்லக்கைப் பார்த்தாயா?” என்று கேட்டாள் பூங்குழலி. “பார்த்தேன், பழுவூர் இளையராணியின் பல்லக்குப் போல் இருந்தது.”

“விழுந்த மரம் அந்தப் பல்லக்கின் மேலே விழுந்திருக்கக் கூடாதா?”

“கடவுளே! ஏன் அப்படிச் சொல்கிறாய்? பழுவூர் ராணியைப் பார்த்து அவள் மூலமாக ஏதோ காரியத்தைச் சாதிக்கப் போகிறதாகச் சொன்னாயே?”

“ஆமாம், இருந்தாலும், அந்தப் பழுவூர் இளையராணியை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை!” “பிடிக்காவிட்டால், அவள் பேரில் மரம் முறிந்து விழ வேண்டுமா, என்ன?”

“சாதாரணப்பட்டவர்களின் தலையிலேதான் மரம் விழ வேண்டுமா? ராணிகளின் தலையிலே விழக் கூடாதா? அது போனால் போகட்டும் இப்போது நாம் பல்லக்கினருகில் சென்று பழுவூர் ராணியைப் பார்த்துப் பேசலாமா? கோட்டைக்குள் போவதற்கு அவளுடைய உதவியைக் கேட்கலாமா?”

“அழகுதான்! ராணியைப் பேட்டி காண்பதற்கு நல்ல சமயம்! நல்ல இடம்! பல்லக்கின் கிட்டப் போனால் மழைக் கால இருட்டில் திருட வருகிறோம் என்றெண்ணி நம்மை அடித்துப் போட்டாலும் போடுவார்கள்.”

“ராணியை நான் பார்த்துவிட்டால் அப்புறம் காரியம் எளிதாகி விடும்”

“அது எப்படி?”

“என் அண்ணியின் பெயரைச் சொல்வேன் அல்லது மந்திரவாதி ரவிதாஸன் அனுப்பினான் என்பேன்.”

“நல்ல யோசனைத்தான்! ஆனால் ராணியின் அருகில் நெருங்க முடிந்தால் அல்லவோ?.. அதோ பார், பூங்குழலி.” மீண்டும் ஒரு மின்னல் மின்னியது. அதன் வெளிச்சத்தில் இரண்டு பேர் பல்லக்கைத் தூக்குவது தெரிந்தது. ஆகா! கிளம்பிவிட்டார்களா? இல்லை, இல்லை! மண்டபத்தை நோக்கியல்லவா பல்லக்கு வருவது போலக் காண்கிறது? ஆம், சிறிது நேரத்தில் பல்லக்கு மண்டபத்தின் முகப்புக்கு வந்து சேர்ந்தது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் அதை இறக்கி வைத்தார்கள்.

“பழுவூர் இளையராணி நம்மைத் தேடிக் கொண்டல்லவா வருகிறாள்?” என்றாள் பூங்குழலி.

அமுதன் அவளுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு மண்டபத்தின் உட்புறத்தை நோக்கி நகர முயன்றான் ஆனால் பூங்குழலி அவ்விதம் நகர மறுத்தாள்.

இதற்குள் “யார் அங்கே?” என்று ஓர் அதட்டும் குரல் கேட்டது.

பல்லக்கைச் சுமந்து வந்தவர்களில் ஒருவனின் குரல் என்பதைத் தெரிந்து கொண்டு, “பயப்படாதே, அண்ணே! உங்களைப் போல் நாங்களும் வழிப்போக்கர்கள்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திட்டமிட்டு வேலை செய்தால்



துறையூர் என்னும் நாட்டை மகதவர்மன் என்னும் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். அவனிடம் ஏராளமான படை வீரர்கள் இருந்தனர். அதற்காக மற்ற நாட்டுடன் போர் புரிய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் அந்தப் படை வீரர்களைக் கொண்டு உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்தினான். இதன் மூலம் நாட்டில் திருட்டு, கொள்ளை போன்ற குற்றங்கள் இல்லாமல் இருந்தன. அதே போல் விவசாயம் செய்யும் நிலங்களை இரண்டாகப் பிரித்து அதற்கேற்றவாறு வரி வசூல் செய்து அந்த வருவாய் மூலம் மற்றைய காரியங்களுக்கு செலவுகள் செய்து நாட்டை வளமுடன் வைத்துக் கொண்டான்.

இவ்வாறு நல்ல முறையில் ஆட்சி செய்து கொண்டிருந்த மகதவர்மனுக்கு பெரிய சோதனை வந்தது. அந்த வருடம் நாட்டில் பெரும் பஞ்சம் தலை விரித்தாடியது. மழையே பெய்யவில்லை. இதனால் பயிர்கள் கருகி விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் திண்டாடினர். மன்னனும் முடிந்தவரை சமாளித்துப் பார்த்தான்.

விவசாயம் நலிந்ததால் வரிகட்ட முடியாமல் விவசாயிகள் தடுமாறினர். வரி கட்டாததால் நாட்டில் பண பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் அனைவரும் மிகுந்த துன்பம் அடைந்தனர்.

அப்பொழுது ஒரு துறவி அந்த நாட்டுக்கு வந்தார். மகதவர்மன் உடனே அவரைப் பார்க்க வேண்டி அவர் தங்கியுள்ள குடிலுக்கு வந்தான். அங்கு துறவியின் சீடர்கள் துறவி தூங்குகிறார் என்றனர். மன்னன் நான் காத்திருக்கிறேன் என்று வாசலில் காத்திருந்தான்.

ஒரு மணி நேரத்தில் துறவி எழுந்து விட்டார். மன்னர் தங்களுக்காக வெளியே நீண்ட நேரமாக காத்திருக்கிறார் என சொல்லவும் துறவி மன்னனைக்காண அவரே வெளியே வந்து விட்டார்.

மன்னன் எழுந்து அவர் காலடியை வணங்கினான். மகதவர்மா இந்த நாட்டின் மன்னனான நீ எனக்காக ஏன் இவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும் எழுப்பி விட உனக்கு அதிகாரம் இருந்தும் ஏன் எனக்காக இவ்வளவு நேரம் காத்திருந்தாய்?

முனிவரே! கற்றோருக்கும் வயதில் மூத்தோருக்கும் குருவுக்கும், உம்மைப்போன்ற துறவறம் கொண்டோருக்கும் பணிவுடன் நடந்து கொள்வதுதான் மனித குல தர்மம்.

அதில் மன்னன் மட்டும் என்ன விதி விலக்கா? உன் பணிவும் பண்பும் என்னை வியப்படைய வைக்கின்றது. உனக்கு என்ன வேண்டும் கேள்? கேட்ட துறவியிடம் என் நாட்டில் மழை இல்லாமல் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் சொல்ல முடியாத அளவுக்கு துன்பப்படுகிறார்கள், இதற்கு நீங்கள் ஒரு வழி சொல்ல வேண்டும். என்று பணிவுடன் கேட் டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தங்களது ஒவ்வொரு செயல்களின் மூலம் மகிழ்ச்சியைப் பரப்புபவர்களே மேன்மையானவர்கள்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொண்டர்கள் என்போர் அன்புடையவர்களாக....

முருகனும் ஔவையாரும் சம்பாசனை செய்கின்ற காட்சி அற்புதமானது.

ஓர் இடத்தில் பெரியது எது? என முருகன் கேட்கிறார். அதற்குப் **பெரிது பெரிது புவனம் பெரிது** எனப் பதிலளிக்கும் ஔவையார்; ஈற்றில் **தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே** என்கிறார்.

இவ்வாறு தொண்டர்களின் பெருமையே பெரிது என ஔவையார் கூறுவதற்கான காரணத்தையும் அவரே தருகிறார்.

ஆம், **இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்.** ஆக, தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்ற ஔவையாரின் இறுதி முடிவுக்குக் காரணம் தொண்டர்களின் உள்ளத்தில் இறைவன் குடியிருக்கிறான் என் பதாகும்.

ஆம், தொண்டர்கள் என்போர் இறைவனை தம் நெஞ்சில் குடியிருத்தி இருப்பவர்கள்.

எனவே தொண்டர்கள் என்போர் பிறர் மீது அன்பு செலுத்துகின்ற அறத்தை உடையவர்களாக இருக்க வேண்டும்.

எனினும் நம் மண்ணில் சிற்சில இடங்களில் தொண்டர்கள் சிலரின் நடவடிக்கைகள் மிகவும் கவலை தருவதாக அமைகிறது.

ஆம், ஒரு பெரும் ஆலயத்தில் ஒழுங்குக் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதென்பது சாதாரணமான விடயமல்ல.

இலட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடுகின்ற இடத்தில் இலட்சோப இலட்சம் குண வியல்பு கொண்ட மக்கள் வருவர். எனவே அவர்களைக் கையாள்வதென்பது கடினமானதுதான்.

ஆனாலும் அன்பு என்ற உயர்ந்த மனித நேயத்துக்கு முன்னால், எந்த மனிதனும் தன்னைத் தாழ்த்தி அதற்கு உரிய மதிப்பைக் கொடுப்பான்.

எனவே ஆலயங்களில் தொண்டர்களாக இயங்குவோர் அன்போடும் பரிவோடும் அடியார்களை அணுக வேண்டும்.

இதைவிடுத்து சண்டித்தனத்தோடும் அவரவர்க்கு உரித்தான பதகளிப்போடும் அடியார்களுடன் அணுக முற்படும்போது, அது விபரீதமாக மாறிவிடும்.

ஆக, ஆலயங்களில் அடியார்கள் எங்ஙனம் ஒழுங்கு முறைகளைப் பின்பற்ற வேண்டும் என நாம் நினைக்கின்றோமோ அதுபோல, தொண்டர்களும் அன்புடமை – பண்புடமை – இரக்கம் – இன்சொல் என்ற உயரிய அணிகலன்களை அணிந்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான் தொண்டர்களின் நோக்கமும் அடியார்கள் ஆலயத்துக்கு வருகை தந்த தன் நோக்கமும் நிறைவேறும் என்பதால், அன்புடன் கூடிய இன்சொல் மூலம் அடியார்களை ஒழுங்குபடுத்துங்கள்.

**இதைவிடுத்து என்னால் அங்ஙனம் செய்ய முடியாது என்று யாரெல்லாம் நினைக்கிறார்களோ, அவர்கள் தொண்டர் சேவைக்குக் குந்தகம் செய்யாமல் தவிர்த்துக் கொள்வது தான் தக்க செயலாகும்.**

# ஆளுநர்களின் கீழ் மாகாணசபைகள் செயற்படுவது சட்ட விரோதம்

## மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துக – சாகர காரியவசம்

(கொழும்பு)

ஆளுநர்களின் கீழ் மாகாண சபைகள் செயற்படுவது சட்ட விரோதம். உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் எனப் பொது ஜனப் பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் பற்றி அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாதாள குழுக்களின் எழுச்சிக்கு கடந்த அரசாங்கங்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள கருத்து அவதானத்துக்குரியது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தான் பாதாளக்குழுத் தலைவர்கள் நாட்டை விட்டு ஓடித் தலைமறைவானார்கள்.

பாதாளக் குழுக்களுக்கு எதிராகக் கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பாதாளக் குழுக்களுக்கு எதிராக கடுமையான தீர்மானங்களைக் கடந்த அரசாங்கங்கள் எடுக்கும் போது மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டு பாதாளக் குழுக்களைப் பாதுகாத்தது. அதன் விளைவை இன்று நாடு எதிர்கொள்கிறது.

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன. பொலிஸாரின் முன்பாக துப்பாக்கிதாரிகள் தமது இலக்கினை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

பொதுமக்களின் பாதுகாப்பு அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கங்களை விமர்சித்துக் கொண்டிருக்காமல் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி பாதாளக்குழுக்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இலங்கையின் அரச நிர்வாகக் கட்டமைப்பில் பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் பிரதானவையாகக் காணப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இதற்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல்முறைமையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிக்குள்ளாக்கினார்.

இதற்கு தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழல் காணப்படுகிறது. ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியான ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் மாகாண சபைகள் இயங்குவது சட்டவிரோதமானதுடன் ஜனநாயகத்துக்கும் விரோதமானது ஆகவே தேர்தலை நடத்த அரசாங்கம் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை

## இரத்தாவதை எதிர்த்து மேலும் இரு மனுக்கள்

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்யும் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் மேலும் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வெயாங்கொடையைச் சேர்ந்த ஹரிந்திரரத்ன பனகல மற்றும் பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த பிரேமசிறி விஜேசேகர ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

முன்மொழியப்பட்ட சட்டமூலத்தின் சில பிரிவுகள் அரசியலமைப்பினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அதிகார பகிர்வு, இறையாண்மை மற்றும் மக்களின் இறைமையை மீறும் வகையில் உள்ளதாக மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் முன்மொழியப்பட்ட சட்டமூலத்தின் விதிகள், ஒட்டுமொத்தமாக, அர சியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை மீறுவதாகவும் அரசிய லமைப்பின் 1, 3, 4 மற் றும் 12(1) பிரிவுகளை மீறுவதாகவும் உள்ளதென மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே சட்டமூலத்தின் தொடர்புடைய விதிகளை நிறைவேற்ற பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை எனவும் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளனர்.

இதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேராவும் முன்னதாக குறித்த சட்டமூலத்தை எதிர்த்து மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கிழவன்காடு கலாமன்றத்தினரின் விசேட கலை நிகழ்வு நல்லூரில்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மகோற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் “தெய்வீகத் திருக்கூட்டம் 2025” நிகழ்வானது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்றுவரும் நிலையில்,

இன்றைய தினம் கிழவன்காடு கலாமன்றத்தின் அறநெறி மாணவர்களது விசேட கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அதன் ஓர் அங்கமாக “கருணைக்கு முருகன்” எனும் தொனிப்பொருளில் ஆன்மீகப் பிரசாரகர் சங்கத் தலைவர் திருமதி அருள்பரன் துஸ்யந்தினி அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும்

யாழ்.பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளரும் கிழவன்காடு கலாமன்ற நடன ஆசிரியருமான முதுகலைமாணி கணேசலிங்கம் பவன் அவர்களின் நாட்டிய அர்ப்பண நிகழ்ச்சியும் யாழ்.பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளரும் கிழவன்காடு கலாமன்ற இசை ஆசிரியருமான நுண்கலைமாணி புலேந்திரன் கோபிசாந் அவர்களின் விசேட இசைக்கச்சேரியும் சிறப்பு நிகழ்வுகளாக அரங்கேறவுள்ளன. (ம-7)

## 36 புதிய அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான பதிவுக்கு விண்ணப்பித்த 83 புதிய அரசியல் கட்சிகளில் 36 கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பதிவுக்கு விண்ணப்பித்த குறித்த அரசியல் கட்சிகள் ஆரம்ப பரிசீலனையின்போது அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யத் தவறியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மீதமுள்ள 47 அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் இந்த அரசியல் கட்சிகளின் நேர்முகத் தேர்வுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேநேரம் இதுவரை 86 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 41

**சொக்கன்**

மறுநாள் ஜாக்விஸ் பாரிஸ் சென்று சேர்ந்தார். மொசாட் சொன்ன இடத்தில் வண்டியை நிறுத்திப் பூட்டினார். திரும்பிப் பார்க்காமல் நடந்தார்.

அவர் அந்தப்பக்கம் போனதும் எங்கிருந்தோ இரண்டு மொசாட் உளவாளிகள் தோன்றினார்கள். டூப்ளிக் கேட் சாவி போட்டு ஜாக்விஸின் காரைத் திறந்தார்கள். அங்கே ஈராக் விஞ்ஞானிகளின் பட்டியல் அவர்களுக்காகக் காத்திருந்தது.

உடனடியாக இந்தப் பட்டியல் முழுவதும் விசேட கமெரா மூலம் பிரதியெடுக்கப் பட்டது. அதில் உள்ள பெயர்கள் அனைத்தும் இஸ்ரேலில் உள்ள மொசாட் மேலிடத்துக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் இதில் யாரை யாவது விலைக்கு வாங்கிக் காரியம் சாதிக்க முடியுமா என்று கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு தேட ஆரம்பித்தார்கள்.

ம்ஹூம் பிரயோஜனம் இல்லை. ஜாக்விஸ் கொடுத்த பட்டியலில் இருந்த ஈராக் விஞ்ஞானிகள் யாரைப் பற்றியும் மொசாட்டுக்கு எந்த விவரமும் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் குழம்பினார்கள்.

அப்போதும் மொசாட் நம்பிக்கை இழக்கவில்லை. நாம விரிச்ச வலையில மீன் எதுவும் சிக்கவில்லை. அதனால் என்ன? ஒரு தூண்டிலைப் போட்டுட்டுப் பொறுமையாக் காத்திருப்போம்! யாராச்சும் மாட்டாமலா போயிடுவாங்க?

## சபல கேஸ் சைன்டிஸ்ட்

ஃப்ரான்ஸில் மொசாட் விரித்த வலையில் சிக்கியது ஒரே ஒரு மீன் பட்ரஸ் ஈபென் ஹலீம்.

ஈராக்கைச் சேர்ந்த ஹலீமுக்கு வயது நாற்பதைக் கடந்துவிட்டது. பாரிஸில் தங்கி ஏதோ படித்துக் கொண்டிருந்தார்.

நாற்பது வயதில்



என்ன படிப்பு?

உங்களுடைய சந்தேகம் நியாயமானது தான். உண்மையில் ஹலீம் ஒரு விஞ்ஞானி. ஈராக் தேசத்துக்கான அணு உலையைத் தயாரிக்கும் இரகசிய ப்ராஜெக்டில் பணியாற்றிக் கொண்டிருந்தார். இந்த விடயம் வெளியே தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக அவருக்கு மாணவன் வேடம் போட்டு அனுப்பி வைத்திருந்தார்கள்.

ஆனால் மொசாட் எப்படியோ இந்த விடயத்தை மோப்பம் பிடித்துவிட்டது. ஹலீமின் வீட்டில் ஒட்டுக்கேட்கும் கருவிகளைப் பொருத்தி உளவு பார்க்க ஆரம்பித்தார்கள்.

கொஞ்ச நாள் கழித்து ஹலீமுடைய மனைவி சமீரா ஈராக் திரும்ப வேண்டியிருந்தது. விமானம் ஏறுவதற்குமுன்னால் பொண்டாட்டி ஊர்ல இல்லையேன்னு கண்டவ பின்னாடி நாக்கைத் தொங்கப் போட்டுகிட்டு அலையாதீங்க அப்புறம் நான் பொல்லாதவளாகிடுவேன் என்று எச்சரித்தார் அவர்.

என்னம்மா இப்படிச் சொல்றே என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா? அப்பாவியாகக் கேட்டார் ஹலீம்.

நீ ஒரு சபல கேஸ்ன்னு எனக்கு நல்லாத் தெரியும்ய்யா என்றார் சமீரா. அதனாலதான் சொல்றேன் நான் திரும்பி வர்றவரைக்கும் ஒழுங்கா கையையும் வாயையும் பொத்திகிட்டு சும்மா இருக்கணும் சரியா?

இந்தக் குடும்பச் சண்டையை ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்த மொசாட் நிபுணர்கள் உற்சாகமானார்கள். ஹலீமை எங்கே தட்ட வேண்டும் என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

அடுத்த வாரம் ஹலீம் வழக்கமாக பஸ் ஏறுகிற நிறுத்தத்தில் ஒரு புதிய பெண் தென்பட்டார். அவளுடைய உடல் வனப்பும் கவர்ச்சியான ஆடைகளும் பார்ப்பவர்களைச் சுண்டியிழுந்தன. பத்து நிமிடத்துக்குள் அந்த பஸ்ஸ்டாப்முழுக்க ஜொள் மழை.

மற்றவர்களைப் போலவே ஹலீமும் அந்தப் பெண்ணைப் பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தார். அவளிடம் ஒரு வார்த்தை பேச வாய்ப்புக் கிடைக்காதா என்று உள்ளுக்குள் ஏக்கம் ஆனால் வாயைத் திறப்பதற்குப் பயம்.

சிறிது நேரம் கழித்து அங்கே ஒரு சொகுசு கார் வந்து நின்றது. அவள் அதில் ஏறிக்கொண்டாள். மின்னல் வேகத்தில் அந்தக் கார் பறந்து சென்று மறைந்தது.

ஹலீம் பெருமூச்சுடன் தன்னுடைய பேருந்து வரும் திசையை நோக்கித் திரும்பினார். யார் அந்தப் பெண்? மீண்டும் அவளைப் பார்க்கிற வாய்ப்புக் கிடைக்குமா?

மறுநாளும் அவள் வந்தாள் அதேமாதிரி சிக்கனமான உடைகள் வெறும் பார்வையிலேயே நெருப்புப் பற்ற வைக்கும் கண்கள் ஹலீம் திக்குமுக்காடிப் போனார்.

ஆனால் இன்றைக்கும் அதே சொகுசு கார் வில்லனாக வந்தது.

சொடக்குப் போடும் நேரத்துக்குள் அவளைக் கொத்திக்கொண்டு போய்விட்டது.

இப்படிச் சில நாள்களாகவே அந்தப் பெண் ஹலீமுக்குத் தரிசனம் கொடுப்பது பிறகு சரேலென்று மறைந்து போவது என விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.

மனைவி ஊரில் இல்லாத நேரத்தில் இந்தச் சம்பவம் ஹலீமை எக்கச்சக்கமாகச் சூடேற்றியது. அதேசமயம் கண்ணுக்கு எட்டுவது கைக்கு எட்டவில்லையே என்று வெறுப்பாகவும் இருந்தது.

திடீரென்று ஒரு நாள் அந்தச் சொகுசு காரைக் காணோம் கொஞ்ச நேரம் காத்திருந்தபிறகு அந்தப் பெண் பஸ்ஸில் ஏறிச் சென்றுவிட்டாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஹலீமுக்கு ஆச்சர்யம் என்னாச்சு? இவளை வழக்கமாக ஒரு தடியன் பிக்கப் செய்வானே? அவன் எங்கே?

அவர் யோசித்துக் கொண்டிருந்த போதே அந்தக் கார் வந்து நின்றது. பிரதர் இங்கே ஒரு பொண்ணு நின்னுகிட்டிருந்தாளா? நீங்க பார்த்தீங்களா? அவங்க அப்பவே பஸ்ல ஏறிப் போய்ட்டாங்களே என்றார் ஹலிம்.

அடடா என்று உச்சுக்கொட்டினான் அந்த சொகுசு பார்ட்டி. இந்தப் பொண்ணுங்களே இப்படித்தான் பாஸ் நாம இவளுங்களுக்காக எவ்ளோ நேரம் என்னாலும் தேவுடு காக்கணும் ஆனா இவங்க நமக்காக அஞ்சு நிமிடம் கூட வெயிட் பண்ணமாட்டாங்க.

ஹலீம் உள்ளுக்குள் மெல்லச்சிரித்துக் கொண்டார். டேய் மடையா இவ்ளோ அழகான பெண்ணை காக்க வைக்கலாமா? இப்ப நல்லா அவதிப்படு! ஓகே சார் நான் கிளம்பறேன் என்றான் அவன் நீங்க எங்க போகணும்?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரிகளுக்கு...

என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் முன்னெடுக்கப்பட்டு வரும் Citizens' Voice வேலைத்திட்டத்தின் கீழ் வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு நேற்றுச் சமுகமளித்து தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலான விடயங்களை கேட்டறிந்த போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது கிட்டத்தட்ட 40,000 பட்டதாரிகள் வேலையில்லாமல் காணப்படுகின்றனர். தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள், கடந்த தேர்தல் காலத்தில் பட்டதாரிகளுக்கு தொழில் பெற்றுத் தருவோம் என வாக்குறுதியளித்தனர். "வளமான நாடு அழகான வாழ்க்கை" என்ற கொள்கை அறிக்கையின் 72 ஆவது பக்கத்தில், வேலையில்லாப் பட்டதாரிகளை எவ்வாறு தொழிலுக்கு உள்ளீர்ப்போம் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் சமயங்களில் வழங்கிய வாக்குறுதிகளும், ஏமாற்றும் கதைகளும் இன்று சமூக ஊடகங்களில் பரவிக் காணப்படுகின்றன. தாம் பதவிகளுக்கு வந்த பிற்பாடு தொழில்களை நிச்சயம் பெற்றுத் தருவோம் என ஆளும் தரப்பு அமைச்சர்கள் தேர்தல் சமயங்களில் வேலையில்லா பட்டதாரிகள் மத்தியில் பல வாக்குறுதிகளை வழங்கினர்.

தமது முதலாவது வரவு செலவுத் திட்டத்திலேயே தொழில்களைப் பெற்றுத் தருவோம் என வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். தேர்தல் காலத்தில் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவைப் பெற்றுத் தர வேலையற்ற பட்டதாரிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை முன்னெடுத்த நபருக்கு இன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பணிப்பாளர் பதவியைப் பெற்றுக் கொடுத்து விட்டு, ஏனைய பட்டதாரிகளை கைவிட்டுள்ளனர் என்றார்.

(ம-7)

## இ.போ.ச...

கொண்டிருந்தது.

இதன்போது பொன்னாலைச் சந்தியில் குறித்த பேருந்தை வழிமறித்து, பேருந்தின் சாரதி மீதும் நடத்துநர் மீதும் தனியார் பேருந்து சாரதி ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார். நேரப் பிரச்சினை காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்த அரச பேருந்தின் சாரதியும் நடத்துநரும் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட குறித்த தனியார் பேருந்துச் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7,104)

## தமிழர் தாயகத்...

கோரி தமிழ் மக்கள் இன்றும் போராடி வருகின்றனர். குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் வருடக்கணக்கில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி எந்த அரசும் இதுவரை எந்தப் பதிலும் வழங்கவில்லை. இதேவேளை புதிது புதிதாக மனிதப் புதைகுழிகளும் கண்டு பிடிக்கப்பட்டு அதற்குள் இருந்து சிறுவர்கள், பெண்கள் உட்பட நூற்றுக் கணக்கானவர்களின் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இந்த மனிதப் புதைகுழிகள் தொடர்பில் உள்நாட்டில் நீதியான விசாரணைகள் இடம்பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும், குற்றம் இழைத்தவர்களுக்கான தண்டனையும் கிடைக்கும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆகவேதான் தமிழ் மக்கள் இந்த விடயங்களில் சர்வதேச விசாரணை ஒன்றை கோருகின்றனர். மனிதப் புதைகுழிகள் தொடர்பான நவீன தொழில்நுட்ப உதவிகள் உட்பட சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் இக் கோரிக்கையினை வலியுறுத்தி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் கையெழுத்துப் போராட்டத்தை அடுத்த வாரம் முன்னெடுக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்.நகரில்...

யாழ்ப்பாண நகரப் பகுதியில் நூறு போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(ம-7,33)

## மீன் பிடிக்க...

மரணமடைந்துள்ளார்.

இதில் மயிலிட்டி விநாயகர் வீதியைச் சேர்ந்த அரியகுட்டி கரிகரன் (வயது-64) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (17) பிற்பகல் 4 மணியளவில் கடல்தொழிலுக்குச் சென்ற நிலையில் நேற்று திங்கட்கிழமை (18) அதிகாலை 1.15 மணியளவில் படகில் மயங்கி விழுந்ததையடுத்து அவர் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டபோதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## மூன்று...

தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ரெலிக்கொம்...

இலக்கத்துக்கு 10 ஆயிரம் ரூபாய் வைப்புச் செய்யப்படுகிறது.

இவ்வாறு பணத்தை வைப்பிலிட்டு உரியவர்களை நம்பவைத்து, பின்னர் உங்கள் கையடக்கத் தொலைபேசிக்கு வந்துள்ள ஓ.ரி.பி (OTP) இலக்கத்தைக் கூறுமாறு அவர்கள் கேட்கின்றனர்.

10 ஆயிரம் ரூபாய் கிடைத்த நம்பிக்கையில் OTP நம்பரை சம்பந்தப்பட்டவர் கூற, அவ்வளவுதான் குறித்த வங்கிக் கணக்கில் உள்ள பணம் முழுவதும் அபகரிக்கப்பட்டு விடுகிறது.

இத்தகைய மோசடிச் சம்பவங்களில் பலர் ஏமாந்துள்ளதாக ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் யாழ்.வட்டாரம் தெரிவித்துள்ளது.

எனவே இவ்வாறான மோசடிகளை நம்ப வேண்டாம் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந)











































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியத் தூதுவர் – ஜனாதிபதியின் செயலாளர் சந்திப்பு



(கொழும்பு) ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிற்கும் இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று (18) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கொரியாவின் புதிய ஆட்சியின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளை அடையாளம் கண்டு நெருக்கமாகச் செயற்பட கொரியா தயாராக உள்ளதாக இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீ தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளின் அடிப்படையில் தொடர்ந்து ஆதரவை வழங்க கொரிய அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் தூதுவர் வலியுறுத்தினார்.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (KOICA) புதிய பிரதிநிதிகள் இங்கு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்ததுடன், இலங்கையில் முன்னெடுக்கப்படும் KOICA திட்டங்களை விரைவாக முடிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, KOICA இலங்கைக்கான பணிப்பாளர் யுலி லீ (Yooli LEE), கொரியா எக்ஸிம் வங்கியின் கொரியா பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் (EDCF) கொழும்பு அலுவலகத்தின் பணிப்பாளர் ஓ ஜியொன்க் - டே (Oh Joeng-tae) ஆகியோர் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-7)

## குளித்தபோது...

உயிரிழந்துள்ளார்.

நேற்றுத் திங்கட்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சோரன்பற்று, பளையைச் சேர்ந்த நந்தகுமார் ராஜன் (வயது 30) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

சோரன்பற்றுப் பகுதியைச் சேர்ந்த ஒன்பது இளைஞர்கள் கொண்ட குழு ஒன்று பிறந்த நாள் கொண்டாட்டமாக உழவு இயந்திரத்தில் நேற்று (18) நண்பகல் தாளையடி கடற்கரைக்குச் சென்று கடலில் குளித்துள்ளனர்.

இதன்போது மாலை 5.30 மணியளவில் குறித்த இளைஞன் கடலில் பல்டி அடித்து தலையில் காயமடைந்த நிலையில் மயக்கமுற்றுள்ளார்.

இதையடுத்து சக நண்பர்கள் உழவு இயந்திரத்தில் இளைஞனை ஏற்றிக்கொண்டு மருதங்கேணி மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,60,104)

## புலம்பெயர்...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பிரிவினைவாதக் கொள்கை கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. இவர்களை மகிழ்விப்பதற்காக எதிர்வரும் ஆண்டு முதல் காலப்பகுதியில் மாகாண சபைத்தேர்தலுக்கான அறிவிப்பை அரசாங்கம் விடுக்கும் என்றார்.

மேலும், முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர கொண்டு வந்த இலங்கை மின்சார சபை (திருத்தச்) சட்டத்தை தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கவாதியான கடுவலை மாநகர சபையின் தற்போதைய மேயர் ரஞ்சன் ஜயலால் சட்டவரைபை தீ வைத்து கொளுத்தினார். கஞ்சன விஜேசேகர கொண்டு வந்த சட்டத்தில் போலியான திருத்தங்களைச் செய்து அண்மையில் இலங்கை மின்சார சபை (திருத்தச்) சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

அன்று எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் இன்று முழுமையான ஆதரவளித்துள்ளார்கள். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இவ்விடயம் தொடர்பில் ஏதும் பேசுவதில்லை. அண்மையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டத்தினால் இலங்கையின் மின்சாரம் மற்றும் வலுசக்தித்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும்.

வலுசக்தி துறையின் சுயாதீனத்தை பிற நாடுகளுக்கு விட்டுக்கொடுத்து நாட்டின் இறையாண்மையை அரசாங்கம் கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்றார். (ம-7)

## மாகாண...

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 2026ம் ஆண்டில் முதல் 6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

மாகாண சபைத் தேர்தல் நடந்தற்குப் பிற்பாடு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

மேலும் மாகாணசபைத் தேர்தலை நடத்த முன்னர் அதில் உள்ள சட்டச் சிக்கல்கள் நிவர்த்தி செய்யப்படும் என்றார். (ம-7)


## கல்லீரல் தேவை

உடனடிக் கல்லீரல் தானதாரர்கள் தேவை
உயிர் காக்கும் உதவி

எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு அவசரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை (Liver Transplant) தேவை. உங்கள் தன்னார்வதானம் அவருக்கு புதிய வாழ்க்கையைத் தரலாம்.

தகுதிகள்
வயது: 20 – 50 வயது.
எடை: 50 – 70 கிலோ.
இரத்த வகை: O (ஓ) மட்டுமே.
மதுபானம் உபயோகிப்பவர்கள் அல்லாதவர்கள் (noalcohol).

முக்கியக் குறிப்பு: தானதாராகத் தேர்ந்தெடுக்கப்படுவது முழுமையான மருத்துவ, மனோதத்துவ மற்றும் ஆய்வு பரிசோதனைகளுக்குப்பிறகு மட்டுமே.

தானதாரர்கள் (Donors) 3முதல் 6 வாரங்களில் முழுமையாக குணமடைவர்கள். (சம்பந்தப்பட்டவர்கள் மட்டும்தொடர்பு கொள்ளவும்)

தொலைபேசி : 0703011765

உதவி தர விரும்புமா? தயவு செய்து உடனே தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் முடிவு ஒருவரின் வாழ்க்கையை மாற்றியமைக்கும்.
(1462)

## தேவை

சிங்கள மொழி கற்றுத் தருபவர்.
Jaffna Universityக்கு
அருகாமையில் நல்ல சம்பளம்
வழங்கப்படும்.
077 712 1032
(5081)

## உடனடி வேலைவாய்ப்பு

வடமராட்சி பிரதேசத்தில் எமது கிளைகளை விஸ்தரிப்பதற்கு சந்தைப்படுத்தல் பிரிவுக்கு முழு நேர, பகுதி நேரமாக கடமையாற்ற ஆட்சேர்ப்பு செய்கின்றோம். அனுபவம், தகைமைக்கு ஏற்ப பொருத்தமான பணிக்கு அமர்த்தப்படுவார்கள். ஆர்வமுள்ளவர்கள் உங்கள் விபரங்களை Whatsapp இற்கு அனுப்பவும்
தொடர்பு: 077 711 7606
(1459)

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
UK - 1320/=
Australia - 2220/=
France - 2080/=
Canada - 2570/=
Germany - 1920/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி
(5078)

## காயத்திரி திருமண சேவை

சகல விதமான திருமண பொருத்தங்களும் பார்க்கப்படும்.
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
உரும்பிராய் 077 844 9861
(5082)

## உடன் விற்பனைக்கு

யாழ்.விக்ரோறியா வீதியில் விக்ரோறியா வீதி முகப்புடன் பதினாறு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
குறிப்பு : 4 பரப்புக்களாகப் பிரித்தும் விற்கப்படும்.
தொடர்பு: 077 723 2535
(C-3676)

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Resturant ற்கு உணவு பரிமாறுபவர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் வரவேற்பாளர்கள்தேவை.
076 830 3931
(C-3672)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3674)
UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, புதுக்குடியிருப்பு, கோப்பாய், பண்டத்தரிப்பு, மட்டக்களப்பு, கொடிகாமம், சுன்னாகம், மானிப்பாய், திருகோணமலை, புத்தூர், யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி, சாவகச்சேரி, சங்கானை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org